பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18—3—1994) காலை 10 மணக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 14.01 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

[8] பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

1. 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆலய நிருவாக வாரிய விதிகளை வகுப்பது குறித்து,வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 13—12—1991 ஆம் நாளிட்ட 505 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

2. 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமய நிலையங்கள் (அலுவலர் மற்றும் ஊழியர்கள்) பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7–10–1993 ஆம் நாளிட்ட 347 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்) 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

3. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்ற (வகைமுறைகள்) விதிகளை வகுப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2–11–1993 ஆம் நாளிட்ட 371 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர்மன்றச் (சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 42/1992) 22 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

4. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் (சம்பளங்கள் சலுகைகள் மற்றும் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி வரன்முறைகள்) விதிகளை வகுப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 2—11—1993 ஆம் நாளிட்ட 372 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்ற சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 22 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

5. வருவாய் ஈட்டிப்பு மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளு தல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—12—1993 ஆம் நாளிட்ட 395 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

6. 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (உரிமம் மற்றும் அனுமதி, விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20—7—1989 ஆம் நாளிட்ட 847 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

7. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்] விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 4—2—1993 ஆம் நாளிட்ட 31 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

8. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு சட்டத்தின் கீழ் தேசிய அனுமதி பெற்றுள்ள சரக்கு போக்கு வரத்து வாகனங்களுக்காக செலுத்தக்கூடிய வரி முறையில் மாறு தல் செய்வது குறித்து உள் (போ IV) துறையின் 5—11—1993 ஆம் நாளிட்ட 1642 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1973) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

9. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (முன்னாள் உறுப்பினர்களுக்கான மருத்துவக் கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் சில பணியாளரமைப்பு I மற்றும் சட்டமன்றம்) துறையின் திருத்தங்கள் செய்வது குறித்து பொது 4—2—1993 ஆம் நாளிட்ட 123 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

10. வேலூர் பிரிவின் 113 நாட்டு எண்ணெய் செக்கு உரிமை யாளர்களால் 1971–72 ஆம் ஆண்டு முதல் 1987–88 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட வேண்டிய வரி, அபராத வட்டி, மேல்வரி மற்றும் கூடுதல் வரி தொகையான ரூ. 16,09,579-னை கைவிடு

தல் குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—8—1993 ஆம் நாளிட்ட 50 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

11. 1983 84 காலவரையில் கதர் மற்றும் கிராம தொழில் ஆணையத்தினரால் வாங்கப்பட்ட பருத்திக்காக செலுத்த வேண்டிய வரி மற்றும் கூடுதல் விற்பனை வரியினை தள்ளுபடி செய்வது குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—7—1993 ஆம் நாளிட்ட 130 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

12. 1984–85 முதல் 1987-88 வரை விற்பனை செய்யப்பட்ட பூண்டிற்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி, மேல்வரி, கூடுதல் மேல்வரி மற்றும் தண்டத்தீர்வை தொகை ரூ. 14,52,684 தள்ளுபடி செய்வது குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 16—6—1993 ஆம் நாளிட்ட 184 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

13. வருவாய்த்துறையின் 24—3—1961 ஆம் நாளிட்ட II 1—1608 1961 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—9—1992 ஆம் நாளிட்ட 337 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

14. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—10—1993 ஆம் நாளிட்ட 364 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

15. கனடா கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து வெகுமதியாக பெறப்பட்டு சென்னை, தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்து உற்பத்தியாளர்கள் இணையத்தினரால் விற்பனை செய்யப்படும் கொடி முந்திரி எண்ணெய்க்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—11—1993 ஆம் நாளிட்ட 392 ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

16. விலங்கினங்களின் தோல்களின் விற்பனைக்காக செலுத்தப்படவேண்டிய விற்பனை வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29—12—1992 ஆம் நாளிட்ட 454 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

17. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 24—12—1990 ஆம் நாளிட்ட 1021 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

18. மதுரை, பசுமலை திருவாளர்கள் மகாலஷ்மி டெக்ஸ்டைல் மில்ஸ் நிறுவனத்தினரால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியினை ஒரு ஆண்டிற்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29—7—1993 ஆம் நாளிட்ட 263 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

19. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தினரால் வாங்கப்பட்ட ஓர் நடமாடும் தூர் அகற்றும் இயந்திர நிலையத்திற்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—10—1993 ஆம் நாளிட்ட 338 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

20. திருச்சிராப்பள்ளி தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தினரால் செலுத்த வேண்டிய வரியினை குறைப்பது, உள் (போ-1) துறையின் 12—10—1993 ஆம் நாளிட்ட 1666 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்த்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1994 மார்ச் 17]

21. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, உள் (போ. I) துறையின் 30—11—1993 ஆம் நாளிட்ட 1717 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1975) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

22. ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது உபரி பயணிகள் பேருந்துகளுக்காக செலுத்தப்பட வேண்டிய மேல் வரியினை 1/4 பங்காக குறைப்பது குறித்து, உள் (போ. I) துறையின் 14—1—1994 ஆம் நாளிட்ட 1773 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

23. 1991–92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956, 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

24. 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு கணக்கு விவர அறிக்கை. [1948 ஆம் ஆண்டு மின்சார வாரியச் (வினியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61 (1) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

25. 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர் புறநிதி அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

26. 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS